**சிலுவைப் பயணத்தில்...**

**எதிர்நோக்கின் திருப்பயணிகளாய்... (தவக்காலம் 2025)**

**திரு. கிருபாவளன் சென்னை-15**

**முன்னுரை:**

**யூபிலி ஆண்டில் இருக்கும் நாம், எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் பயணிக்க அழைக்கப்படுகிறோம். எதிர்நோக்கின் சுடரினை நம்மில் தூண்டிவிடத் தவக்காலத்தைவிடச் சிறந்த தருணம் இருக்க இயலாது. தூய பவுலடியார் வழியாக ஆண்டவர் கூறுவதுகூட அது தான்: "தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்" ... இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!" (2 கொரி.6:2). அருளின் காலமாகிய தவக்காலத்தின் பக்தி முயற்சிகளிலேயே, மிகவும் பின்பற்றப்படுவது, சிலுவைப்பாதை செய்வதும், பாடுகளின் நிலைகளைத் தியானிப்பதும் தான்.**

**தவக்காலத்தின் அழைப்புக்கு ஏற்றவாறு சிலுவைப்பாதை சிந்தனைகள், பெரும்பாலும் மனவருத்தம், மனமாற்றம் ஆகியவற்றை மையப்படுத்தியவையாகவே இருப்பது இயல்பே. ஆனால் இந்த யூபிலி ஆண்டிலே, சிலுவைப்பாதையை எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் மேற்கொள்ள முயல்வோம். யூபிலி ஆண்டின் இலட்சினையில், அலைகள் நிரம்பிய பிறவிக்கடலிலே, திருச்சிலுவை நங்கூரமாய்ச் சுட்டிக்காட்டப்படுவது போல, நம் எதிர்நோக்கும், நம்பிக்கையும், மீட்பும், சிலுவையில் தான் என்கிற உணர்வோடு பயணிப்போம் வாரீர்.**

## முதல் நிலை:



**இந்த முதல் நிலையில் ஆளுநன் பிலாத்து முன்பாக இயேசு குற்றவாளியாய் நிறுத்தப்படுகிறார். ஆனால் பிலாத்துவோ, "இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை" (லூக்.23:4) என உரக்கச் சொல்கிறான். ஆயினும், இயேசுவை சாவுக்குத் தீர்வையிடுகிறான்; இயேசுவும் அமைதியாய் அதை ஏற்கிறார். மண்ணுலக அதிகாரத்திற்குப் பயந்த கோழையாய் அல்ல; விண்ணகத் தந்தைக்கும் அவரது திருவுளத்திற்கும் பணிந்தவராய்.**

**நமது மீட்பிற்கான எதிர்நோக்கின் அடித்தளமே இதுதான். "நேர்மையாளருக்காக ஒருவர் தம் உயிரைக் கொடுத்தலே அரிது. ஒருவேளை நல்லவர் ஒருவருக்காக யாரேனும் தம் உயிரைக் கொடுக்கத் துணியலாம். ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார்" (உரோ. 5:7,8).**

**நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காக மரிக்கத் துணிந்தார் என்பது தான், நாம் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும், நமது தனிப்பட்ட, சமூக, உலகளாவிய சூழல் எவ்வளவு பரிதாபமாக இருந்தாலும், நாம் மீட்கப்பட முடியும் என்கிற எதிர்நோக்கை நம்மில் விதைக்கிறது. அதே நேரம், எத்துணைக் காலம் நாம் பராபாவைப் போலவும், வணங்காக் கழுத்துடைய யூதர்களைப் போலவும் முரட்டுப் பிடிவாதம் உள்ளவர்களாய் இருக்கப்போகிறோம் என்கிற கேள்வியையும், எப்போது இயேசுவைப் போல, வாழ்வின் இருள் சூழ்ந்த நேரங்களிலும் இறைத் திருவுளத்தைக் கண்டுணரப்போகிறோம் என்கிற சவாலையும் நம் முன்பாக வைக்கிறது.**

**வணங்காக் கழுத்துடனும் முரட்டுப் பிடிவாதத்துடனும் நாங்கள் வாழ்ந்த தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.**

ஜெபம்: வாழ்வின் இருள்நிறைந்த வேளைகளிலும், இறைத்திருவுளத்தைக் கண்டுணர்ந்து எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் பயணிக்கும் அருள் தாரும் ஆண்டவரே.

## இரண்டாம் நிலை:



இந்த இரண்டாம் நிலையில், இயேசுவின் தோள்கள்மீது சிலுவை சுமத்தப்படுகிறது. 'நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்″ (எசா.53:5). நமது குற்றங்கள் உட்பட, தலைமுறைதோறும் மனிதர்கள் செய்த அனைத்து பாவங்களுக்குமான பரிகாரத்தை, நம்மால் ஒருபோதும் செலுத்த முடியாது என்கிற மனித போதாமையையும் தாண்டி, நாம் நலம் பெற முடியும் என்கிற எதிர்நோக்கினை, இயேசு, நம் குற்றங்களுக்கான கழுவாயை தம்மீது ஏற்றுக்கொண்டதன் மூலம் உணர்த்துகிறார். அதே வேளையில், நம்முடைய இழிநிலையிலிருந்து விடுபடவும், மீண்டெழவும், எந்த ஒரு குறுக்கு வழியோ, எளிய வழியோ இல்லை என்கிற பாடத்தையும் இந்தத்தலம் கற்பிக்கின்றது.

கடவுளின் ஒரே மகன் பாரச் சிலுவையைச் சுமந்து தான் உலகை மீட்க வேண்டும் என்பது இறைஞானம் என்றால், ஈனப்பிறவிகளான நாம் வாழ்வின் கடமைகளிலிருந்து விடுபட்டவர்களாய் எப்படி இருக்க முடியும்? "என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்″ என்கிற நம்பிக்கை தருகிற எதிர்நோக்கின் வார்த்தைகளை இயேசு சொன்ன போதும் ‶என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளுங்கள்″ என்றும் சேர்த்தே சொன்னார். கிறிஸ்துவும் கிறிஸ்தவமும் கடமைகள் இல்லாத களியாட்டத்தையோ தொல்லைகள் இல்லா சுகபோகத்தையோ வாக்களிக்கவில்லை. கிறிஸ்து தருகிற ஒரே நம்பிக்கை ‶என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது" (மத்.11:28,30) என்பது தான். கனிவும் மனத்தாழ்மையும் நிறைந்த இயேசுவிடமிருந்து கற்றவர்களாய், கடமைகள் ஆற்றிய நிறைவோடு இளைப்பாறுதல் பெறுவோம்,

குறுக்குவழிகளையும், இலகுவான வாழ்க்கையையும் தேர்ந்துகொண்ட தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: உம்மிடம் நிறைவு காணும் எதிர்நோக்கோடு, எங்கள் அன்றாடச் சிலுவைகளை அகமகிழ்வோடு சுமக்கும் திருப்பயணிகளாய் எமை மாற்றும் ஆண்டவரே.

## மூன்றாம் நிலை:



இந்த மூன்றாம் நிலையில், சிலுவையின் பாரத்தால் இயேசு கீழே விழுவதைத் தியானிக்கின்றோம். ஆம், “நம் தலைமை குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல; மாறாக, எல்லா வகையிலும் நம்மைப் போலச் சோதிக்கப்பட்டவர்; எனினும் பாவம் செய்யாதவர்″ (எபி.4:15). கீழே விழுவதிலிருந்து இறைமகன் இயேசுவுக்குக் கூட விலக்கு இல்லை என்பது, எவ்வளவு தான் மானுடம் வீழ்ந்திருந்தாலும், இயேசுவைப் போல, நாமும் எழ முடியும் என்கிற எதிர்நோக்கினைத் தருகிறது.

திருவிவிலியம் கூறுகிறது, “நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார்″ (நீமொ. 24:16). தவறுதலும் விழுதலும் மானுடத்திற்குப் புதியது அல்ல. அதனால் தானே, "தவறுதல் மானுட இயல்பு; மன்னித்தல் தெய்வீக இயல்பு" என்கிறோம். ஆதாம் ஏவாளின் முதல் வீழ்ச்சியிலிருந்து, மனித சரித்திரம் என்பது, வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருகிற பரமபத விளையாட்டாகவே அமைந்துள்ளது.

ஆனால், மனிதனின் வீழ்ச்சிக்கும் இயேசுவின் விழுதலுக்கும் இடையே பெரிய வேறுபாடு ஒன்று உள்ளது. இயேசு விழுந்ததற்குக் காரணம் அவரது பாவமோ பலவீனமோ அல்ல, உலகின் பாவங்கள் அனைத்தும் செம்மறியான அவர்மீது சுமத்தப்பட்டதால் தான். எனவே, அவர் வழியாகவும், அவரிலும் நம் பாவங்கள் கழுவப்படுவதற்கான

நம்பிக்கையும் எதிர்நோக்கும் நமக்குக் கிடைக்கப்பெறுகிறது. அதே வேளையில், அவரது வார்த்தைகள் நமக்கு எச்சரிக்கையும் விடுக்கின்றது. "இதோ பாரும், நீர் நலமடைந்துள்ளீர்; இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனி பாவம் செய்யாதீர்" (யோவா.5:14). தயக்கம் எதுவும் இல்லாமல் பாவ வழிகளில் பயணித்த தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: விழுகிற ஒவ்வொரு முறையும் இனி பாவம் செய்வதில்லை என்கிற உறுதியோடு எழுந்து நடக்கும் எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் எமை மாற்றும் ஆண்டவரே.

## நான்காம் நிலை:



இந்த நான்காம் நிலையில், இரண்டு நபர்களின் சந்திப்பை நாம் நினைவு கூர்கிறோம்: பாவமே இல்லாத ஒருவர், பாவமின்றி உற்பவித்த இன்னொருவர். ஆயினும், அவர்கள் இருவரும் சோகத்தில் சந்தித்து, ஒருவர் ஒருவரது துன்பத்தில் பங்கேற்கின்றனர். எதற்காக? இறைதிருவுளப்படி மனிதர் மீட்புப் பெற. "நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்" (2 கொரி.5:21).

கூட்டொருங்கியக்க திருஅவைக்கான பயணத்தில் அதிகம் ஒலிக்கப்படும் சொற்களில் 'பங்கேற்பு' என்பது ஒரு முக்கியச் சொல்லாகும். இயேசு, மரியாவின் சோக சந்திப்பு என்பது பங்கேற்பின் உயிருள்ள சித்தரிப்பு என்றே சொல்லலாம். அவர்கள் இருவருக்கும் இடையே மட்டுமல்ல, வீழ்ந்த மானுடத்தோடு அவர்கள் இருவரும் கொண்டிருந்த பங்கேற்புக்கும் சிறந்த குறியீடு இந்தச் சந்திப்பு. விண்ணக உதவி நமக்கு எப்போதும் உண்டு என்கிற எதிர்நோக்கை இந்தச் சந்திப்பு உறுதிப்படுத்துகிறது.

மரியாவின் பங்கேற்பு இயேசுவுக்கு ஆறுதலும் பலமும் சேர்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை. கானாவூர் திருமணத்தின்போது தான் சுட்டிக்காட்டிய நேரம் இதுதான் என்பதை உணர்த்தும் விதத்தில் இயேசு மரியாவைப் பார்த்துப் புன்னகைத்திருக்கவும் கூடும். இயேசுவும் மரியாவும் இருக்கின்ற இடத்தில் தண்ணீர் திராட்சை இரசமாவதற்கும், துக்கம் மகிழ்ச்சியாய் மாறுவதற்கும், எப்போதும் வாய்ப்பு உண்டு; எதிர்நோக்கும் நம்பிக்கையும் உண்டு. நாம் செய்ய வேண்டியதெல்லாம், "அவர் நமக்குச் சொல்வதெல்லாம் செய்வது தான்" (யோவா.2:5). நமது மீட்புக்கான இறைத்திட்டத்தில் நாம் இப்படித்தான் பங்கேற்க முடியும் - அவர் திருவுளத்தை நிறைவேற்றுவதன் மூலம்.

கடவுளின் மீட்புத்திட்டத்தில் எம்பங்கேற்பை கொடுக்கத் தவறிய தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: எங்களது நிறைவாழ்வுக்கான இறைத்திட்டத்தில், மரியாவைப் போல, ஊக்கமுடன் பங்கேற்கும் எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் எமை மாற்றும் ஆண்டவரே.

## ஐந்தாம் நிலை:

சிரேன் ஊரானாகிய சீமோன் இயேசுவின் சிலுவையைச் சுமக்க உதவுகிறார். கட்டாயத்தின் பேரில் என்றாலும்கூட அப்போது இயேசுவுக்கு அதிகம் தேவைப்பட்ட உதவி அது. எனவே தான், ஒத்தமைவு நற்செய்தியாளர்கள் மூவருமே அதனைப் பதிவு செய்கிறார்கள், பல விவரங்களோடு. "அப்பொழுது அலக்சாந்தர், ரூஃபஸ் ஆகியோரின் தந்தையான சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். படைவீரர்கள் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்" (மாற்.15:21).



**இறைமகனாகிய இயேசுவுக்கு உதவிக்கரம் தேவைப்பட்டது என்பது புரியாத ஒன்றாய் இருக்கலாம். ஆனால் நாம் தனித்தவர்கள் அல்ல, அனைவர் வாழ்விலும் உதவி தேவைப்படும் தருணங்கள் வரத்தான் செய்யும் என்கிற உண்மையை உணர்த்துகிறது இந்த ஐந்தாம் நிலை. திருவிவிலியம் கூறுகிறது, "தனி மனிதராய் இருப்பதை விட இருவராய் இருப்பது மேல். ஏனெனில் ... ஒருவர் விழுந்தால், அடுத்தவர் அவரைத் தூக்கி விடுவார்" (ச.உ. 4:9,10). அதுதான் அதுதான் கூட்டொருங்கியக்கத்தின் சாராம்சம் - கரம் கோர்த்து ஒன்றாய் பயணிப்பது.**

**இந்த ஐந்தாம் தலத்தில், இயேசுவுக்கு உதவுவது சீமோனாக இருக்கலாம். ஆனால் எப்போதுமே, நம் பாரங்களைச் சுமப்பதும், சில வேலைகளிலே தொலைந்து போன ஆடுகளாகிய நம்மையே தம் தோள்மீது சுமப்பதும் இயேசு தான். இந்தப் பேருண்மை நம்மை எதிர்நோக்கு நிறைந்த நம்பிக்கையாளர்களாய் நிமிர்த்துகிற அதே வேளையில், நம் ஒவ்வொருவரின் கடமையையும் நினைவூட்டுகிறது. "ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு, கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்" (கலா.6:2). இத்தகைய ஒன்றித்த செயல்பாடுதான் திரு அவையின் அழைப்பும் கூட.**

**அடுத்திருப்போரின் தேவைகளை உணராது, அவர்களுக்கு உதவாத அந்நியராயிருந்த தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.**

ஜெபம்: **ஒருவர் மற்றவரின் சுமைகளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு, ஒன்றிப்பு மனநிலையோடு எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் பயணிக்கும் அருள் தாரும் ஆண்டவரே.**

### ஆறாம் நிலை:



**இந்த ஆறாம் நிலையில், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தின் நடுவிலிருந்து வீரப்பெண் வெரோனிக்கா இயேசுவின் திருமுகத்தைத் துடைக்க முன்வருவதை நினைவு கூர்கிறோம். எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்தது போல, "நாம் பார்ப்பதற்கு ஏற்ற அமைப்போ அவருக்கில்லை; நாம் விரும்பத் தக்க தோற்றமும் அவருக்கில்லை; அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார் ... காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார்; அவர் இழிவுபடுத்தப்பட்டார்; அவரை நாம் மதிக்கவில்லை" (எசா.53:2,3).**

**இதயமற்ற மனிதர்களின் ஈனச்செயலை எடுத்துக்காட்டும் இந்த இருள்சூழ் வேளையிலும்கூட, ஒளிர்விடும் நம்பிக்கை கீற்றாய் வீரமங்கை வெரோனிக்காவின் செயல் அமைகிறது. போர் மேகங்கள் உலகை சூழ்ந்திருக்கும் இவ்வேளையில், திருத்தந்தை கூறுவது போல, பகுதி பகுதியாக மூன்றாம் உலகப்போர் மூண்டு கொண்டிருக்கும் இத்தருணத்தில், நாம் முற்றிலும் நம்பிக்கை இழக்கவோ, எதிர்நோக்கின்றி வாழவோ வேண்டியதில்லை.**

**இன்னும் இந்த உலகில் நல்ல இதயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. சின்னஞ்சிறிய பிள்ளைகள் தொடங்கி இளையோரும் பெரியோரும், ஆண்களும் பெண்களும், காயப்பட்ட மானுடத்தையும், பாழ்பட்டுப்போன சுற்றுச்சூழலையும் காத்து, மானுட மாண்பை மீட்டெடுக்கச் சர்வதேச அரங்குகளிலும், அனைத்துலகத் தளங்களிலும் பேசிக்கொண்டும், செயல்பட்டுக்கொண்டும் இருக்கத்தான் செய்கிறார்கள். எதிர்நோக்குடன் வாழ்வதற்கான அறிகுறிகள் தென்படுகிற அதே வேளையில், நாம் செய்ய வேண்டிய கிறித்தவக் கடமை ஒன்று நம் முன்பாக உள்ளது. "உடன் பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள்; பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள் ... அழுவாரோடு அழுங்கள். ஒருமனத்தவராய் இருங்கள்" (உரோ.12:10,15,16)**

**எமைச்சுற்றியுள்ள இயற்கையையும், மனிதரையும், கண்டுகொள்ளாமல், கடமைதவறிய தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.**

ஜெபம்: மானுடம் மற்றும் இயற்கை மீது படிந்துள்ள மாசுகளைக் களைய, எம்மாலான சிறிய பங்கினை ஆற்றி, எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் முன்னேறிட அருள் தாரும் ஆண்டவரே.

## ஏழாம் நிலை:



இரண்டாம் முறை இயேசு கீழே விழுவது நம்மை ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுப்புவதோடு "ஏன் இவ்வாறு செய்தாய்?" என்கிற வினாவையும் எழுப்பிகிறது. இந்த வினாவானது திருவிவிலியத்தில் முதன் முறையாக ஏவாளிடமும் (தொ.நூ.3:13) இரண்டாம் முறை காயினடமும் கேட்கப்பட்டது. அதே கேள்வியை இன்றளவும் கடவுள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்.

ஏவாள் மற்றும் காயினது தீச்செயல்கள் இறைவனின் இதயத்தை எவ்வளவு காயப்படுத்தியதென்றால், அவர் குற்றம் நிகழ்ந்த இடத்திற்கே இறங்கி வந்து "ஏன் இவ்வாறு செய்தாய்?" என்று கேட்டார். அதே கடவுள் தான் "எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; ... அவர்களை விடுவிக்கவும் ... அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கிவந்துள்ளேன்" (வி.ப.3:7,8) என்றும் கூறினார். கூறியபடியே வியத்தகு செயல்கள் புரிந்து அவர்களை விடுவிக்கவும் செய்தார். அதே கடவுள், அதே விடுவிக்கும் செயலை, வேறுவிதமாக இயேசுவிலே நிறைவேற்றுகின்றார்.

இறைத்தந்தையின் அரியணையிலிருந்து இயேசு இறங்கி வந்ததும், நலிவுற்று தாழ்வடைந்த மானுடத்தோடு அவர் கொண்ட ஒன்றிப்பும், விடுதலைக்கான எதிர்நோக்கை நம்மில் தூண்டிவிடுகிறது. இன்றில்லையென்றாலும் ஒரு நாள் கடவுள் செயல்பட்டு, நம்மை விடுவிப்பார் என்கிற எதிர்நோக்கையும் நம்பிக்கையையும் நமக்குள் ஏற்படுத்துகின்றது. அத்தகைய எதிர்நோக்கு தான், மார்ட்டின் லூத்தர் கிங் போன்றோரை 'ஒரு நாள் மேற்கொள்வோம்' என்கிற நம்பிக்கையோடு பயணிக்கச் செய்தது. இயேசுவின் இரண்டாவது விழுதலும் எழுதலும், பவுலடியாரின் வார்த்தைகளை நமக்குள் ஓங்கி ஒலிக்கச் செய்கிறது: "தீமை உங்களை வெல்லவிடாதீர்கள், நன்மையால் தீமையை வெல்லுங்கள்!" (உரோ.12:21).

தீமையின் அதிகாரத்திற்கு அஞ்சியும், அவநம்பிக்கை உணர்வுக்கு அடிபணிந்தும் போன தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: மனச்சோர்வு என்கிற பாதாளத்திலிருந்து எழுந்து, துணிவாய்ப் போராடுகிற துடிப்போடு, எதிர்நோக்கின் திருப்பயணிகளாய், வீறுநடை போட அருள் தாரும் ஆண்டவரே.

## எட்டாம் நிலை:



இந்த எட்டாம் நிலையில், துன்புறும் இயேசுவுக்கு ஆறுதல் சொல்லப் பெண்கள் சிலர் வருவதைக் காண்கிறோம். அவர்கள் அழுவதைப் பார்த்த இயேசு, "எனக்காக அழ வேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" (லூக்.23:28) என்று கூறுகிறார். கண்ணீரைக்கடந்து துயர் துடைக்கும் உத்தியும், துயரத்தை மகிழ்ச்சியாக மாற்றும் வித்தையும், இயேசுவிடம் உண்டு என்பது தான் நம் எதிர்நோக்கின் ஆதாரம்.

நாம் வாழுகிற பதட்டம் நிறைந்த காலகட்டத்தில், நம்மைச் சுற்றி நிகழ்வன யாவும் நம்மைக் கதிகலங்கச் செய்கின்றன. தொடர்ந்து பயணிக்கவே அச்சமாகவும் கடினமாகவும் உள்ளது. ஆனால், எந்த ஒரு பயணியும், உண்மையாகவே முன்னேற நினைத்தால், கண்ண்ணெதிரே தென்படும் நிலைமைகளைக் குறித்து ஒப்பாரி வைப்பதை நிறுத்திவிட்டு, துரிதமாய்ச் செயல்பட்டே ஆக வேண்டும். அந்தச் செயல்பாடு முதலில் நம்மில் தொடங்க வேண்டும்.

இயேசுவும் கூட, இரத்த வியர்வை சிந்தினார். "தந்தையே எல்லாம் உம்மால் இயலும். இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்று ஜெபிக்கவும் செய்தார். ஆனால் தனக்குத் தரப்பட்ட பாத்திரம் எவ்வளவு கசந்ததாகவும், துயர்நிறைந்ததாக இருந்தாலும், அதனை ஏற்கவும், தனது பங்கை ஆற்றவும் இயேசு தயங்கவும் இல்லை; ஒதுங்கவும் இல்லை. எல்லாம் இறைவனால் கூடும், அனைத்தும் இறைவேண்டல் மூலம் இயலும் என்கிற எதிர்நோக்கு இருக்கப்பெறினும், நாம் இருக்கும் நிலைகுறித்து வருத்தப்படுவதைத் தாண்டி, ஏதாவது செய்தாக வேண்டும். உலகில் நாம் விரும்பும் மாற்றத்தை முதலில் நம்மில் கொண்டு வர வேண்டும்.

நிலவும் சூழலைச் சீர்செய்ய, சிறு துரும்பும் முயலாமல், வெறுமனே சலித்துக் கொண்ட தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: இவ்வுலகின் துயரத்தை மகிழ்ச்சியாக மாற்றிட, எதிர்நோக்கின் திருப்பயணிகளாய், நாங்கள் செய்யக்கூடிய, செய்யவேண்டிய அனைத்தையும் செய்ய அருள் தாரும் ஆண்டவரே.

### ஒன்பதாம் நிலை:



இந்த ஒன்பதாம் நிலை, இயேசு தமது கல்வாரிப் பயணத்தில் மூன்றாம் முறை விழுந்ததை நினைவு படுத்துகிறது. வெறும் மூன்று முறையல்ல, எப்படிப் பார்த்தாலும், இயேசு பல முறை விழுந்து எழுந்திருப்பார். வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் தோற்றுப்போய் வீழ்ந்தவர்களாய், நம்பிக்கை இழந்து துவள்கின்றபோது, உரத்து ஒலிக்கும் இயேசுவின் எதிர்நோக்கு நிறை வார்த்தைகள் நம்மை எழுப்பி விடுகின்றன: "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றிக் கொண்டுவிட்டேன்" (யோவா. 16:33).

நாம் வாழ்கின்ற இக்காலகட்டத்தில் யாருமே மனநிறைவோடும் உற்சாகத்துடனும் இருப்பதாகத் தெரியவில்லை. படிப்புச்சுமை அதிகமாக உள்ளதாகக் குழந்தைகள் புலம்புகிறார்கள். வெற்றி பெறவே மூச்சுமுட்டும் அளவிற்குப் போட்டி இருப்பதாக இளைஞர்கள் பரிதவிக்கிறார்கள். பண நெருக்கடியும் மன நெருடல்களும் தாங்க முடியாத அளவு தங்களை நெருக்குவதாகக் குடும்பங்கள் உணர்கின்றன. 'நாங்கள் வாழ்ந்த நல்ல நாட்கள் போயே போய்விட்டன; எங்குப் பார்த்தாலும் இருளே உள்ளது; அருளற்றுப் போய்விட்டது இவ்வுலகம்' எனப் பெரியவர்கள் புலம்புகின்றனர்.

இப்படிப்பட்ட சூழலில்தான், எதிர்நோக்கின் திருப்பயணிகளாக வாழ்வதற்கான அழைப்பைத் திரு அவை விடுகின்றது. யூபிலி ஆண்டு இலச்சினையில் காணப்படும் சிலுவை, மனிதர்களை நோக்கி வளைந்ததாய்ச் சித்தரிக்கப்பட்டிருப்பது போலவே, சிலுவையில் நமக்காகத் துயருறும் இயேசு மட்டுமே, நம்மைத் தேக்க நிலையிலிருந்து எழுப்பி, எதிர்நோக்கோடு செயல்படும் மனிதர்களாக நடத்திச் செல்ல முடியும். அவரது சிலுவையை இறுகப்பற்றிக்கொண்டவர்களாக எழுந்து அவரோடு நடக்கப் பயில்வோம்.

நம்பிக்கையைத் தொலைத்தவர்களாய், எதிர்நோக்கு இழந்தவர்களாய், முன்னேறிச்செல்வதைக் கைவிட்ட தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: ஒருவர் ஒருவரைத் தழுவியவர்களாய், சிலுவையைப் பற்றிக்கொண்டு, தோல்விகளை வென்றெடுக்கும் எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் எமை மாற்றும் ஆண்டவரே.

### பத்தாம் நிலை:

இந்தப் பத்தாம் நிலையில், இயேசு ஆடை களையப்பட்டவராக, அவமானப்பட்டு இருக்கின்றார். ஒரு மாசற்ற மனிதருக்குச் சொல்லொண்ணா வலியை ஏற்படுத்தி, அவரது மனித மாண்பைக் களவாடி, தாங்கள் இழைத்துவிட்ட கொடுமையைக் குறித்து, எந்தவித வெட்கமும் இல்லாமல் கொக்கரித்தது அவரைச் சுற்றியிருந்த இதயமற்ற ஈனர்களின் கூட்டம்.



மானுடத்திற்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைப் பட்டியிலடத் தொடங்கினோம் என்றால், பாலியல் தொல்லைகள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள், உழைப்பவர்கள், இல்லாதவர்கள், அகதிகள் போன்றோருக்கு எதிரான அநீதிகள், வன்முறைகள் என வரிசைப்படுத்தினால், அதற்கு முடிவே இராது. இத்தகைய அச்சம் நிறை சூழலில், எதிர்நோக்கின் சுடரை அணையாமல் காக்க எப்படி முடியும்? கண்களைக் கீழே தாழ்த்தாமல், உயரே உற்று நோக்குவதன் மூலம் தான்!


"எங்கிருந்து எனக்கு உதவி வரும்?" எனக் கூக்குரலிடும் திருப்பாடல் ஆசிரியர் "விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும் … இஸ்ரயேலைக் காக்கின்றவர் கண்ணயர்வதுமில்லை; உறங்குவதும் இல்லை" (தி.பா.121:1,2,4) என எதிர்நோக்குடன் நம்பிக்கையை வெளிப்படுத்தவும் செய்கிறார். தமது ஒரே மகன் துகிலுறியப்பட்டபோது அமைதி காத்தது போலவே, உலகில் பெருகிவரும் தீமைகளையும் அநீதிகளையும் கண்டுகொள்ளாதவராகக் கடவுள் நமக்குத் தோன்றலாம். ஆனால் உயிர்ப்பின்போது, தமது மகனுக்குச் செய்தது போலவே, தக்க நேரத்தில், நமக்கும் 'விடுதலை என்னும் உடைகளை'யும் 'நேர்மை என்னும் ஆடையை'யும் (எசா.61:10) அணிவிப்பார். அதுவரையில் நாம் செய்ய வேண்டியதெல்லாம்: "நன்மைசெய்வதில் மனந்தளாரதிருப்போமாக! நாம் தளர்ச்சி அடையாதிருந்தால்! தக்க காலத்தில் அறுவடை செய்வோம்" (கலா. 6:9).

வெட்ட வெளிச்சத்தில் நிகழும் மனிதாபிமானமற்ற கொடுஞ்செயல்களை, கண்டும் காணாத ஊமையராயிருந்த தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: எங்களது எதிர்நோக்கின் திருப்பயணத்தில், உதவிக்காக உம்மை உற்று நோக்கும் அதே நேரத்தில், நன்மை செய்வதில் நாங்கள் மனம் தளராதிருக்க அருள் தாரும் ஆண்டவரே.

## பதினொன்றாம் நிலை:

இயேசுவின் கைகளையும் கால்களையும் கூரிய ஆணிகளால் துளைக்கின்ற பதினொன்றாம் நிலை இரத்தக்கறை படிந்ததாகவும், குலைநடுங்கச் செய்வதாகவும் இருக்கின்றது. "தீமை செய்வோரின் கூட்டம் என்னை வளைத்துக் கொண்டது … என் கைகளையும், கால்களையும் துளைத்தார்கள். என் எலும்புகளை எல்லாம் நான் எண்ணிவிடலாம்; அவர்கள் என்னை முறைத்துப் பார்க்கின்றார்கள்" (தி.பா.22:16,17) என்கிற திருப்பாடல் வரிகள் அரங்கேறுகின்றன.




இன்றைய அவல நிலையின் காரணமே தீயவர்கள் எல்லாம் வியக்க வைக்கும் வேகத்துடனும் விவேகத்துடனும் கூடிவிடுகிறார்கள். ஆனால் நல்ல மனம் கொண்ட சீமோன்களும், வெரோனிக்காக்களும், யோவான்களும், மரியாக்களும் சிதறிப்போயிருக்கின்றனர். அவர்களது தனிப்பட்ட நற்செயல்கள், தேசியம் என்கிற பெயரிலும், கடவுளின் பெயரிலும் கூட, நடக்கின்ற அளவிடமுடியாத அட்டூழியங்களை எதிர்க்கப் போதுமானதாக இல்லை.

நம்முடைய ஒரே நம்பிக்கையும் எதிர்நோக்கும், நல்லவர்களின் ஒன்றிப்பிலும் கூட்டொருங்கியக்கத்திலும் தான் இருக்கின்றது. யூபிலி ஆண்டின் இலட்சினையானது, உலகின் நான்கு திசையிலுமிருந்து வருகிற நால்வர் ஒருவர் ஒருவரைத் தழுவிக்கொண்டு, சிலுவையை நெருங்கி வருவதைக் குறிக்கின்றது. அது தான் மீட்புக்கான ஒரே வழி, முன்னேறுவதற்கான ஒரே வழி. ஆணிகள் எப்படி இயேசுவை சிலுவையோடு பிணைத்துக்கொண்டனவோ, அவ்வாறே, நாமும் ஒருவர் ஒருவரோடும், இயேசுவோடும் பிணைந்திருப்பதுதான், இன்றைய அல்லல்மிகு பயணத்தில், கரை சேர்வதற்கான வழியும் கூட.

தீயசக்திகளுக்கு எதிராக ஒன்று திரள்வதற்குப் பதிலாக, தப்பேதும் செய்யாத தனி நபர்களாக வாழ்வதில் திருப்தியடைந்த தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: தனிமனித நற்செயல்களைத் தாண்டி, தீமைக்கெதிரான அணிதிரள்வில் ஆர்வமுடன் பங்கேற்று, எதிர்நோக்கின் திருப்பயணத்திற்கு வலிமை சேர்க்க அருள் தாரும் ஆண்டவரே.

## பன்னிரண்டாம் நிலை:



இந்தப் பன்னிரண்டாம் நிலை, 'அவ்வளவு தான்; ஆட்டம் கிளோஸ்' என மனிதக் கண்களுக்குத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அது 'பணி நிறைவுற்றது' - 'எல்லாம் நிறைவேறிற்று' என்பதற்கான நிலை மட்டுமல்ல, விண்ணக வாயிலின் திறப்பு விழாவும் அதுதான். "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக்.23:43) என்கிற இயேசுவின் வார்த்தைகள், வலப்புறம் இருந்த கள்வனுக்குச் சொல்லப்பட்டதாய் இருக்கலாம். ஆனால் அது காலங்கள் தாண்டி அனைவருக்கும் பொருந்தக்கூடிய வாக்குறுதி.

கிறித்தவ எதிர்நோக்கின் அடித்தளம் என்னவென்றால் நமக்கொரு கடவுள் உண்டு; அவர் எப்போதும் நம் பக்கம் இருந்து, நமக்காகச் செயல்பட்டு, அனைத்தையும் நிறைவாக்குவார் என்பது தான். எனவே தான் பவுலடியார் கூறுவார், "அனைத்திலும் நாம் வெற்றிமேல் வெற்றி அடைகிறோம்" (உரோ.8:37) என்று. இம்மானுவேலாக - நம்மோடு கடவுளாக மாறிய இறைவன், நமக்கொரு பணியை விட்டுச்சென்றுள்ளார்: "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்.16:15).

கல்வாரியில் இயேசு நிறைவு செய்த பணியினை, காலம், இடம் ஆகிய எல்லைகளுக்குள் நாம் குறுக்கிவிட முடியாது. உலகின் எல்லைகளுக்கும், காலத்தின் எல்லைகள் தாண்டியும், அந்தப்பணி எடுத்துச் செல்லப்பட வேண்டும். "பயணிக்கும் திரு அவையானது, தனது இயல்பிலேயே தூதுரைப்பணியை உள்ளடக்கியது" என இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு எடுத்தியம்புகிறது. அந்தத் தூதுரைப் பணியை, அல்லது நற்செய்திப் பணியைத்தான், யூபிலி ஆண்டும் வலியுறுத்துகிறது. சிலுவையில் தொங்கும் இயேசு நமக்கு விட்டுச் சென்றுள்ள பணி 'கிறிஸ்து நமக்காக மரித்தார்; அவராலேயே வாழ்வு; அவரிலே தான் நமக்கு நிலைவாழ்வு' என்கிற எதிர்நோக்கின் நற்செய்தியை, வார்த்தையாலும், வாழ்வாலும் பறைசாற்றுவது தான்.

நற்செய்திப்பணி, ஒவ்வொரு கிறித்தவனின் தலையாயப் பணி என்பதை உணராது, பெயரளவில் மட்டுமே கிறித்தவராய் இருந்த தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: உமது உச்சக்கட்ட தியாகத்தை உணர்ந்தவர்களாக, உயிருள்ளவரை நற்செய்திக்கு சான்று பகர்ந்து, மாந்தர் அனைவரையும் எதிர்நோக்கின் திருப்பயணிகள் ஆக்கும் அருள் தாரும் ஆண்டவரே.

## பதின்மூன்றாம் நிலை:



இந்தப் பதின்மூன்றாம் நிலையில், துக்கத்தையும் துயரத்தையும் தாண்டி, இறை சித்தத்திற்கு அமைந்த ஒரு உள்ளத்தைக் காண முடிகிறது. 'இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்த' (லூக். 2:19). மரியா, உள்ளத்தில் இருத்தி தியானிப்பதற்கு மட்டுமல்ல, 'ஒன்றிப்பு' என்கிற மற்றொரு கூட்டொருங்கியக்க முழக்கத்திற்கும் முன்மாதிரியாய் திகழ்கின்றார். சிலுவையின் அடியில், ஈட்டியால் விலா திறக்கப்பட்ட ஒருவரைப் பார்க்கிறோம்; குழந்தையைக் கோயிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த போதே முன்னறிவிக்கப்பட்டதுபோல, இதயம் ஊடுருவப்பட்ட ஒரு பெண்ணையும் பார்க்கின்றோம். இதயத்தால் ஒன்றித்தலுக்கு இதைவிட சிறந்த உதாரணம் இருக்கவே முடியாது.

'ஒன்றிப்பு, ஒருமனப்படல்' ஆகிய பதங்களை, பல சமயங்களில் நாம் 'சேர்ந்து செயல்படுதல், பங்கிட்டுப் பகிர்தல்' என்று பொருள்படும்படி குறுக்கி விடுகிறோம். உண்மையில் நாம் ஒருமித்து செயல்படுவதிலிருந்து ஒருமனத்தோராய் வாழும் நிலைக்கு நகர்ந்து செல்ல வேண்டும். வெறும் பகிர்தலிலிருந்து, ஒருவர் மற்றவரது பாடுகளில் ஒன்றித்திருக்கப் பழக வேண்டும். இதயத்தால் ஒன்றுபட்டு 'நான் இருக்கிறேன்


உன்னோடு' என்கிற தெம்பூட்டி, உடன் பயணிக்க வேண்டும். அப்போது, அவர்கள் அனுபவிக்கும் இன்ப துன்ப உணர்வுகளை நாமும் அனுபவித்து, அவர்களோடு இரண்டறக் கலப்போம். அது தான் கூட்டொருங்கியக்க வாழ்வு.

வறியவர் மற்றும் தேவையில் இருப்போரின் குறை போக்கும் அளவிற்கு செல்வமோ, வசதியோ, நம்மில் பலருக்கு இருப்பதில்லை. ஆனால், அவர்கள் அருகிருந்து, இதயத்தால் ஒன்றுபட்டு, இரக்கத்தோடு செவிகொடுத்து, அவர்கள் சாய்ந்து அழுவதற்கு தோள் கொடுக்க நம் எல்லோராலும் முடியும். மனிதர்கள் பலரது எதிர்நோக்கு, துன்பங்கள் எல்லாம் இல்லாமல் கரைந்துவிடும் என்பதல்ல; மாறாக, தாங்கள் துன்பங்களை எதிர்கொள்கையில், தங்களுக்காகத் துடிக்கின்ற ஒரு இதயம், துணையிருக்க ஒருவர் இருந்திட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு தான். இன்னல் நிறை நம் வாழ்வில், நம்மோடு ஒன்றித்து, நமக்காகத் துடிப்பதற்கு, இயேசுவின் திரு இருதயத்தையும், மரியாவின் துயர்மிகு மாசற்ற இருதயத்தையும் பெற்றிருக்கிற நாம் எத்துணை பேறுபெற்றவர்கள்!

மற்றவர்கள், அதுவும் எங்களுடைய உடனிருப்பும் ஒன்றிப்பும் அதிகம் தேவைப்பட்டவர்களிடமிருந்து ஒதுங்கி நின்ற தருணங்களுக்காக இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: எங்களுடைய உடனிருப்பு தேவைப்படுபவரோடு ஒன்றித்து, 'நான் இருக்கிறேன் உன்னோடு' என்கிற நம்பிக்கையூட்டி, எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் உடனிருக்கும் அருள் தாரும் ஆண்டவரே.

## பதினான்காம் நிலை:



மயான அமைதி நிறைந்த இந்தப் பதினான்காம் நிலையியிலிருந்து 'எல்லாம் முடிந்துவிடவில்லை' என்கிற உரத்த நம்பிக்கையும், உறங்காத எதிர்நோக்கும் பிறக்கின்றன. காலத்தால் அழியாத கல்லறை ஒன்று உண்டென்றால், அது இயேசுவின் இரவல் கல்லறை தான். அழிவிலா இறைவனின் திருமகன், அழிந்திடும் மானுட நியதிக்குத் தன்னை உட்படுத்திக்கொண்டதால், நாம் திருப்பாடல் ஆசிரியரோடு துணிவோடும் எதிர்நோக்கோடும் சொல்ல முடிகிறது, "சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்" (தி.பா.23:4) என.

இயேசுவின் அடக்கத்தின்போது, அதுவரை ஒருவித அச்சத்தால் ஒதுங்கியும் ஒளிந்தும் பின்தொடர்ந்த நிக்கோதேமுவும், அரிமத்தியா சூசையும் துணிவுடன் செயலாற்றுகின்றனர். அவரை எதிர்த்தவர்களைக் கூட, அவர்களை அறியாமலேயே, உண்மையை உரக்கச் சொல்கிறார்கள்: "இனம் முழுவதும் அழிந்து போவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது" (யோவா.11:50) எனத் தலைமைக்குரு கயபா உரைக்கிறார். "இவன் யூதரின் அரசனாகிய இயேசு" (மத்.27:37) என ஆளுநன் பிலாத்து அறிக்கையிடுகிறான். இயேசுவின் பொதுவாழ்வின் போதே ""இறை மகனே ... எங்களை வதைக்கவா இங்கே வந்தீர்?"(மத்.8:29) எனத் தீய ஆவிகள் கூடக் கூக்குரலிட்டன.

நமக்கான எதிர்நோக்கின் செய்தி இதுதான்: பொய்மை நிறை இவ்வுலகில், உண்மையின் குரல்வளை நெறிக்கப்படலாம்; ஆனால் உண்மையை முழுமையாக மூடிவைக்கவும் முடியாது; உறங்க வைக்கவும் முடியாது. "வழியும் உண்மையும் வாழ்வும் நானே" (யோவா.14:6) என்றுரைத்த இயேசுவை, முழுமையாக மூன்று நாட்கள் கூட, கல்லறையில் வைத்திருக்க முடியவில்லை. வாய்மையின் பாதை எத்தனை வலி நிறைந்ததாகவும், இருள் நிறைந்ததாகவும் இருந்தாலும், உண்மையின் ஒளியில் என்றுமே நடப்போம். நிச்சயம் 'வாய்மையே வெல்லும்.'

உண்மையானவர்களின் பக்கம் நிற்கவும், உண்மையை உரக்க அறிக்கையிடவும், அஞ்சிப் பதுங்கிய தருணங்களுக்காக, இரக்கமாயிரும் ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

ஜெபம்: அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் நடுவிலும் உறுதியாய் நின்று, உண்மைக்குச் சான்று பகரும் துணிவோடு பயணிக்கும், எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் எமை மாற்றும் ஆண்டவரே.

## முடிவுரை:



**தொன்று தொட்ட மரபின்படி, சிலுவைப்பாதை, பதினான்காம் நிலையோடு நிறைவு பெறும். ஆனால் இன்றைய காலங்களில், இயேசுவின் உயிர்ப்பினை நினைவு கூறும் பதினைந்தாம் நிலையை நாம் புகுத்தியுள்ளோம். அது மிகச்சரியே! கிறிஸ்துவின் வாழ்க்கை, அவரது பாடுகள் மரணத்தில் நிறைவு பெறவில்லை. மூன்றாம் நாளில், அவர் மாட்சியோடு உயிர்தெழுந்ததில் தான் உச்சம் தொடுகிறது. இயேசுவின் மண்ணுலக வாழ்வின் இலக்கும், தவக்காலத்தின் நோக்கமும், சிலுவைப்பாதையின் கொடுமுடியும் உயிர்ப்பு தான். பவுலடியார் கூறுவது போல, "எல்லாப் பகைவரையும் அடிபணியவைக்கும்வரை அவர் ஆட்சி செய்தாக வேண்டும். சாவே கடைசிப் பகைவன், அதுவும் அழிக்கப்படும்" (1கொரி.15:25,26). எனவே தான், பவுலோடு நாமும், "சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி.15:55) என வெற்றி முழக்கம் செய்ய முடிகிறது. அயர்வுற்று சோர்ந்துபோன பயணிகளுக்கு, இதைவிட சிறந்த எதிர்நோக்கு தரும் வார்த்தைகள் இருக்க முடியாது. ஆம், நம் வாழ்க்கைப் பயணம் இவ்வுலகோடு முடிவுறுவதில்லை. "நமக்கோ விண்ணகமே தாய்நாடு; அங்கிருந்துதான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம். அவர் தமது ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றவும் அனைத்தையும் தமக்குப் பணியவைக்கவும் வல்லவர்" (பிலி.3:20,21). எனவே, இந்த யூபிலி ஆண்டில் மட்டுமல்ல, வாழ்நாள் முழுவதுமே, துணிவுடன் பயணிப்போம் 'எதிர்நோக்கின் திருப்பயணிகளாய்'.**

https://www.anbinmadal.org